**சுருக்கம்**

விதிகள் – தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2015 – விதி 3–ல் துணை விதி 1–க்கு திருத்தம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–3) துறை

அரசாணை(நிலை) எண்.84 நாள்: 03.06.2015

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி.3) துறை, நாள் 18.02.2015.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் எண்.48880/2014/ PRI 1.3, நாள் 20.04.2015.

**ஆணை:**

பின் இணைக்கப்பட்ட அறிவிக்கையானது 03.06.2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப்சிங் பேடி
அரசு செயலாளர்

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
(03.06.2015 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடுவதற்கும் 500 படிகளை அரசிற்கும் அனுப்புவதற்கும்)
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக).
(தங்கள் மாவட்டத்திலுள்ள சம்மந்தப்பட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்).

**நகல்**
சட்டத் துறை, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
அனைத்து பிரிவுகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**<u>பின்னிணைப்பு</u>**

**<u>அறிவிக்கை</u>**

தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 242 (தமிழ்நாடு சட்டம் 21/1994) இன்படி மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தனக்களிக்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி, 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுவதற்கான மற்றும் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குமுறைப்படுத்துதல்) விதிகளில் ஈங்கிதனால் பின்வரும் திருத்தத்தை செய்துள்ளார்.

**<u>திருத்தம்</u>**

கூறப்பட்ட விதிகளில் 3–ஆம் விதியில் (1)–ஆம் துணை விதியில் ''ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)'' எனும் சொற்றொடருக்கு பதிலாக ''ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்)'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்பட்டது.

ககன்தீப்சிங் பேடி
அரசு செயலாளர்